**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.380/2022

வா.சா.1 முருகவேல் த/பெ. வையாபுரி

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–</u>

1. நான் பிரதிவாதிக்கு வாடகைக்காக விடப்பட்ட குடோன் எவ்வளவு சதுரஅடி என்றால் சுமார் 400 சதுரஅடி இருக்கும். அந்த குடோன் எப்போது கட்டப்பட்டது என்றால் 1990ம் வருடம் கட்டப்பட்டது. அந்த குடோன் கட்டப்பபட்டதிற்கான அனுமதி வரைபடம், எந்த வருடத்திற்கான கட்டப்பட்ட அனுமதி ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

2. நீதிமன்றத்திலிருந்து ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டார். நான் சொல்வதுபோல் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சேதாரம் எதுவும் ஏற்படவில்லை என்பதால் தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சேதார தொகையான மாதம் ரூ.5,000/– என்று எப்படி நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் காலி செய்ய சொன்னேன் அவர் காலி செய்யவில்லை அதனால் சேதார தொகை நிர்ணயம் செய்யப்பட்டது.

3. எந்தவித ஆதாரமின்றி சேதார தொகை ரூ.5,000/– மாதம் கேட்பது சட்டப்படியானது அல்ல என்று சொன்னால் சரியல்ல . தாவா சொத்து சேதாரம் அடைந்தது என்று பொறியாளர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. வழக்கில் வழக்கு சொத்துக்கு சேதாரம் என்று மொத்த தொகை ரூ.50,000/– கேட்பது சட்டப்படி சரியானது அல்ல என்று சொன்னால் தவறு. பிரதிவாதி என் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்து இருப்பதால் அதில் இருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

4. தாவாவில் கேட்கப்பட்டுள்ள எந்த தொகையும் பிரதிவாதி செலுத்தவேண்டிய அவசியமில்லை என்று சொன்னால்ல சரியல்ல. என்னுடைய வழக்கு காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை